பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

17 08 2026 MONDAY 12 40 PM

ஆகாஷ்வாணி - செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. கடந்த 12 ஆண்டுகளில் நாட்டின் உயர்கல்வி நிறுவனங்கள் பெரிய அளவில் வளர்ச்சி பெற்றுள்ளதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

2. பொதுத்துறை வங்கிகளுக்கான உயர்நிலைக் குழு விரைவில் அமைக்கப்படும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

3. பீகார் மாநிலம், Lakhisarai மாவட்டம், Ashok Dham கோவிலில் இன்று நேரிட்ட கூட்ட நெரிசலில் 7 பேர் உயிரிழந்தனர்.

4. இந்தியா தலைமையேற்று நடத்தும் பிரிக்ஸ் மாநாடு, கூட்டு முயற்சிகளுக்கு உத்வேகம் அளிக்கும் என்று வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது.

5. உலக கோப்பை ஹாக்கி போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா இன்று இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

>>>>>><<<<<<

கடந்த 12 ஆண்டுகளில் பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையால், நாட்டின் உயர்கல்வி நிறுவனங்கள் பெரிய அளவில் வளர்ச்சி பெற்றுள்ளதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

திருவாரூர் மத்திய பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், அதிக அளவில் மத்திய

பல்கலைக் கழகங்கள், நிர்வாகவியல் கல்லூரிகள் தொழில்நுட்ப கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

கடந்த 12 ஆண்டுகளில் 12 எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் தொடங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதனால், மருத்துவக் கல்விக்கு உத்வேகம் அளிக்கப்படுவதுடன், ஏராளமான ஏழை எளிய மக்களும் தரமான உயர்தர சிகிச்சை பெற்று வருவதாகவும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

பொதுத்துறை வங்கிகளுக்கான உயர்நிலைக் குழு விரைவில் அமைக்கப்படும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெறும் இரண்டு நாள் பொதுத்துறை வங்கிகள் மாநாட்டில் பேசிய அவர், வங்கி துறையில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தங்களை இந்த உயர்நிலைக் குழு அரசுக்கு பரிந்துரைக்கும் என்றும் கூறினார்.

2047ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டும் முயற்சியில், பொதுத்துறை வங்கிகளின் பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று அவர் தெரிவித்தார்.

பொதுத்துறை வங்கிகள் மற்றும் பொது நிதி நிறுவனங்களும், மாறிவரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப முக்கியத்துவம் வாய்ந்த பணிகளை மேற்கொள்வது குறித்தும் இந்த மாநாட்டில் விவாதிக்கப்படவுள்ளதாக அவர் கூறினார்.

வங்கி நிறுவனங்களும், நிதி நிறுவனங்களும் இணைந்து செயல்படுவதன் அவசியத்தை திருமதி. நிர்மலா சீதாராமன் வலியுறுத்தினார்.

>>>>>><<<<<<

பீகார் மாநிலம், Lakhisarai மாவட்டம், Ashok Dham கோவிலில் இன்று நேரிட்ட கூட்ட நெரிசலில் 7 பேர் உயிரிழந்தனர்.

Sawan மாதத்தில் மேற்கொள்ளப்படும் சிறப்பு பூஜையின் போது ஆயிரக்கணக்கான பக்தர்கள் திரண்ட போது, இந்த விபத்து ஏற்பட்டது.

படுகாயமடைந்த 10 பேர், Patna மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்துள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, காயமடைந்தவர்கள் விரைந்து குணமடைய வேண்டும் என்று பிரார்த்தனை செய்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான உதவிகளை மாநில அரசு செய்து வருவதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

பீகார் முதலமைச்சர் திரு. சாம்ராட் சௌத்ரி, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 4 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

15வது இந்தியா - தாய்லாந்து கூட்டு ராணுவப் பயிற்சிக்காக இந்திய ராணுவக் குழு இன்று புறப்பட்டுச் சென்றது.

பாதுகாப்பு அமைச்சகம் இதுகுறித்து வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், Maitree எனப்படும் இந்த கூட்டு ராணுவப் பயிற்சி இருநாடுகளுக்கும் இடையேயான ராணுவ ஒத்துழைப்பை வலுப்படுத்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடர்ந்த காட்டுப் பகுதிகளிலும், நகரப் பகுதிகளிலும் ஊடுருவும் தீவிரவாதிகளை கண்டறிந்து, ராணுவ நடவடிக்கையை மேற்கொள்வதற்கான பயிற்சியும் இதில் மேற்கொள்ளப்படவுள்ளது.

ராணுவத்தினருக்கான களப் பயிற்சிகள், வகுப்புகள் உள்ளிட்டவையும் இதில் இடம்பெற்றுள்ளன.

ராணுவத்தில் சேர்க்கப்பட்டுள்ள புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் அவற்றை கையாள்வதற்கான நடைமுறைகள் குறித்தும் இதில் விளக்கமளிக்கப்படவுள்ளது.

ராணுவம், விமானம் மற்றும் கடற்படையினர் இணைந்து மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் இந்த பயிற்சியில் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளை தொடங்கவுள்ள இப்பயிற்சி, இம்மாதம் 31ஆம் தேதிவரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

ஜம்மு கஷ்மீரில் மக்கள்தொகை கணக்கெடுப்பில் சுயமாக பதிவு செய்யும் முறை இன்று தொடங்கியது.

இம்மாதம் 31ஆம் தேதிவரை இதற்கான இணையதள வசதி செயல்பாட்டில் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜம்மு கஷ்மீரைச் சேர்ந்த ஆயிரத்து 115 கிராமங்கள் மற்றும் 3 நகராட்சிகளில் இந்த சுயபதிவு முறை தொடங்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வசிக்கும் இடம், தொழில் உள்ளிட்ட 40 கேள்விகள் இந்த சுயபதிவு செய்யும் படிவத்தில் இடம்பெற்றுள்ளது.

>>>>>><<<<<<

அஸ்ஸாம் மாநிலத்தில் மழை வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட நான்கு மாவட்டங்களில் உள்ள மக்களுக்கு தலா 15 ஆயிரம் ரூபாய் இடைக்கால நிவாரணத்தை அம்மாநில முதலமைச்சர் Dr. Himanta Biswa Sarma விடுவித்துள்ளார்.

குவஹாத்தியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், Sivagar, Golaghat, Jorhat, Charaideo ஆகிய மாவட்டங்களில்

உள்ள மக்களுக்கு உடனடியாக இந்த தொகை வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணம் மற்றும் மறுவாழ்வு அளிப்பதற்கான நடவடிக்கைகளை அரசு நிர்வாகம் முழுவீச்சில் மேற்கொண்டு வருவதாகவும் Dr. Himanta Biswa Sarma கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

இந்தியா தலைமையேற்று நடத்தும் பிரிக்ஸ் நாடுகள் கூட்டமைப்பு மாநாடு, கூட்டு முயற்சிகளுக்கு உத்வேகம் அளிக்கும் என்று வெளியுறவு அமைச்சகத்தின் பொருளாதார உறவுகளுக்கான செயலர் திரு. Sudhakar Dalela கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று பிரிக்ஸ் உச்சிமாநாட்டின் முன்னோட்டமாக பிரிக்ஸ் பொது சந்திப்பு நிகழ்ச்சியில்

உரையாற்றிய அவர், மனிதாபிமான அணுகுமுறைக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்ற நோக்கில், பிரிக்ஸ் மாநாடு திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

350க்கும் மேற்பட்ட கூட்டங்கள், இந்த மாநாட்டை ஒட்டி பல்வேறு நகரங்களில் நடைபெற்றதாக அவர் கூறினார்.

அரசியல், பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பு ஆகியவற்றை உறுப்பு நாடுகளுக்கு இடையே வலுப்படுத்துவதை முக்கிய குறிக்கோளாக கொண்டு பிரிக்ஸ் உச்சி மாநாடு நடைபெறவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

வளர்ந்து வரும் நாடுகளின் எதிர்பார்ப்புகளை உலக அரங்கிற்கு கொண்டு செல்ல வேண்டியதன் அவசியத்தையும் இம்மாநாடு வலியுறுத்தும் என்றும் அவர் கூறினார்.

பன்முக கட்டமைப்புக்கான ஒத்துழைப்பு குறித்து பேச்சு நடத்துவதற்கான தளமாக இது அமையும் என்று திரு. Sudhakar Dalela தெரிவித்தார்.

நடப்பாண்டுக்கான பிரிக்ஸ் உச்சிமாநாடு, புதுதில்லியில் அடுத்த மாதம் 12ஆம் தேதி தொடங்குகிறது.

>>>>>><<<<<<

ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பழமைவாய்ந்த கைவினைப் பொருட்கள் தயாரிப்பான "டோக்ரா பாணி" உலோக சிற்பக் கலையை சத்திஷ்கட் மாநில பழங்குடியின மக்கள் போற்றி பாதுகாத்து வருகின்றனர்.

தங்களது கலை பாரம்பரியத்தை டோக்ரா பழங்குடியின மக்கள், இந்த சிற்பங்கள் மூலம் வெளிப்படுத்தி வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் - விஜயகுமார் 56 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

மேற்குவங்க மாநிலம், Birbhum மாவட்டத்தில் விடுதி ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 5 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

அந்த விடுதியில் வரவேற்பறையில் ஏற்பட்ட தீ, படிப்படியாக நான்கு மாடி கட்டடத்தில் பரவியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதிகாலை நேரத்தில் அனைவரும் உறங்கிக் கொண்டிருந்த நேரத்தில் இந்த தீ விபத்து ஏற்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

>>>>>><<<<<<

அமெரிக்காவின் ஹவாய் மாகாணத்தில் Lala சூறாவளி தாக்கியதில் ஒருவர் உயிரிழந்தார்.

Big Island தீவில் கனமழை வெள்ளம் மற்றும் நிலச்சரிவு ஏற்பட்டதில், அதிக அளவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

Lala சூறாவளி குறித்து தெரிவித்துள்ள ஹவாய் மாகாண ஆளுநர் திரு. Josh Green, உடமைகளுக்கு மட்டும் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும், உயிரிழப்பு பெரிய அளவில் இல்லை என்றும் கூறியுள்ளார்.

அப்பகுதிகளில் தொடர்ந்து மிக கனமழை பெய்து வருகிறது.

இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட வீடுகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

உலக கோப்பை ஹாக்கி போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா இன்று இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

நெதர்லாந்தின் Amstelveen-ல் இப்போட்டி, மாலை மணி 6.30-க்கு தொடங்குகிறது.

>>>>>><<<<<<

Galle-யில் நடைபெற்று வரும் இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின், மூன்றாம் நாளான இன்று உணவு இடைவேளையின் போது இலங்கை, முதல் இன்னிங்ஸில் 5 விக்கெட் இழப்புக்கு 99 ரன் எடுத்துள்ளது.

இந்தியா தனது முதல் இன்னிங்ஸில் 462 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

>>>>>><<<<<<

தில்லியில் நடைபெற்று வரும் உலக கோப்பை பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில்

இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி இன்று சீனாவின் Yu Qi Shi-யை எதிர்கொள்கிறார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் பி.வி. சிந்து - அயர்லாந்தின் Sophia Noble-ஐ எதிர்த்து விளையாடுகிறார்.

>>>>>><<<<<<